
# உன் பிறந்த நாள்! தமிழர்க்குச் சிறந்தநாள்!



மன்னர்மா மன்னர்தம் அரண்மனை மாடத்தில்
  மகனாய்நீ தோன்ற வில்லை!
மாணிக்கத் தொட்டிலில் தாலாட்டுக் கேட்டுநீ
  மணிவிழி மூட வில்லை!
தென்னவர் குலம்போற்றும் இசைவாணர் குடும்பத்தில்
  செல்வமே பிறந்து வந்தாய்!
சேயான நாள்முதல் "தாய்மாமன்" தோளிலே
  சிட்டுப்போல் தவழ்ந்து வந்தாய்!
பொன்மேனி வாடாமல் உன்னைத்தன் நெஞ்சுக்குள்
  பொத்தியே அவர் வளர்த்தார்!
புகழ்மாலை சூடிநீ உலகத்தை வலம்வரப்
  பொழுதெலாம் "கனா"வ ளர்த்தார்!
கன்னலில் கனிச்சாற்றில் மூழ்கிடும் வண்டுபோல்
  கல்வியில் திளைக்க வைத்தார்!
"கண்ணா!நீ வாழ்க!"என அண்ணாவே உனைத்தேர்தல்
  களத்திலே குதிக்க வைத்தார்!

எய்தாய்நீ இலக்கினை! வடக்குநம் தெற்கினை
  ஏற்குமோர் வழிவ குத்தாய்!
ஏடாளும் வேந்தனாய் நாடாளு மன்றத்தில்
  இலக்கணம் நீப டைத்தாய்!
மையத்தில் குவிந்துள்ள அதிகாரம் பற்றிநீ
  மகத்தான நூல்வ டித்தாய்!
"மாநில சுயாட்சி"யின் உள்ளார்ந்த மாண்பினை
  மாற்றாரும் உணர வைத்தாய்!
வையத்தில் வளர்ந்துவரும் நாடுகள் சார்பிலே
  வாதாடி வெற்றி பெற்றாய்!
வாகான உரையினால் "தோகா"வின் மாநாட்டு
  வரலாற்றில் நிலைத்து விட்டாய்!
செய்தக்கச் செய்கின்ற சான்றாண்மை மிக்கநின்
  சீர்த்தியால் கீர்த்தி பெற்றாய்!
திருவாரூர் மண்வாசம், திருக்குவளை மலர்வாசம்"
  திக்கெட்டும் கமழச் செய்தாய்!

தந்தை,தாய் வழிவந்த அன்பன்றோ! "உன்மாமன்"
  தமிழ்தந்த அறிவும் அன்றோ!
"தாத்தாவும் பாட்டியும்" வீரத்தை ஈர்த்தைத்
  தரவந்தப் பொலிவும் அன்றோ!
சிந்தனை நெற்றியின் மடிப்புகள் ஒவ்வொன்றும்
  செயலுக்கு வியூகம் அன்றோ!
சிங்கம்நிகர் நடைகாணக் கண்கோடி வேண்டுமே!
  " திராவிடத் தீரம்" அன்றோ!
சந்தன நிறமன்றோ! தங்கத்தின் ஒளியன்றோ!
  தனிஎழில் வதனம் அன்றோ!
"தலைவகிடு" அதில்கூடத் தலைவனைப் பின்பற்றும்
  தலைமுடி அழகும் அன்றோ!
சுந்தரம் என்றாலே அழகென்று பொருள்என்று
  சொல்வார்கள்! "தியாக ராஜ
சுந்தரம்" நீயன்றோ!அழகுக்கே அழகூட்டச்
  சொல்தேவை இல்லை யன்றோ!

கலைஞரின் வளர்ப்புநீ! கலைஞரின் வார்ப்புநீ!
  கலைஞரின் "ஞான நகல்"நீ!
கலைஞரை ஆயிரம் கவிஞர்கள் பாடலாம்!
  கலைஞரின் பாடு பொருள்நீ!
கலைஞரின் நம்பிக்கை! கலைஞரின் மனசாட்சி!
  கலைஞரின் மூளை பலம்நீ!
கடல்போலப் படைநூறு வந்தாலும் கலைஞர்க்குக்
  களத்திலே யானை பலம்நீ!
அலையில்நீர்க் குமிழிபோல் இடையில்நீ பிரிந்ததை
  அன்றாடம் எண்ணு கின்றோம்!
அருகில்நீ இல்லாத கலைஞரைப் பார்க்க,மனம்
  ஆற்றாமல் விம்மி நின்றோம்!
சிலையில்நின் திருமுகம் ஒளிவிடும் காட்சியில்
  சிந்தை,உடல் சிலிர்த்து நின்றோம்!
"சிறந்தநாள்! தமிழர்க்குன் பிறந்தநாள்!" என்றுன்னைச்
  சிரம்தாழ்த்தி வணங்கு கின்றோம்!



**... கவிச்சுடர் கவிதைப்பித்தன்**

சுதந்திர தின விழாவை முன்னிட்டு சென்னை, தம்புசெட்டி தெரு, காளிகாம்பாள் உடனுறை அருள்மிகு கமடேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டார்.



### பட்டியலின மாணவர்களுக்கான உண்டு,

# உறைவிடப் பள்ளிகளில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா?

## மக்களவையில், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 17–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் 12 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில், ஸ்ரேஸ்டா என்ற திட்டத்தின் கீழ் பட்டியலின மாணவர்களுக்கென ஒன்றிய அரசால் நடத்தப்படும் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் எவ்வளவு மாணவர்கள் பயின்று வருகிறார்கள்? என்றும், கடந்த நான்கு ஆண்டுகளில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது? எவ்வளவு செலவிடப்பட்டது? என்றும் இடை நிற்றல் குறைந்துள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா என்றும், ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் ராம்தாஸ் அத்வாலேயிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

ஸ்ரேஸ்டா என்ற திட்டத்தின் முதல் நிலை தரவுகளின் படி, வருடத்திற்கு 3000 பட்டியலின மாணவர்களுக்கும், இரண்டாம் நிலை தரவுகளின்படி 13,500 மாணவர்களுக்கும், உண்டு உறைவிட பள்ளிகளில் அனுமதிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும், கடந்த ஆண்டுகளில் 27 மாநிலங்களுக்கு ரூபாய் 276 கோடிகள் செலவில் 67000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என்றும், தமிழ் நாட்டிற்கென, பட்டியலின மாணவர்களுக்கு ரூபாய் 13 கோடிகள் செலவில் 1536 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர் என்று, இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும்,அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 99 சதவீதம் மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்றனர் என்றும், இடை நிற்றல் மிகவும் குறைவாகவே உள்ளது என்றும், இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய அனைத்து மாநில அரசுகளுக்கும், வழி காட்டு நெறிமுறைகளும், அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன என்றும்,

சமூக ஊடகங்களின் மூலமாகவும், அச்சு ஊடகங்களின் மூலமாகவும் பட்டியலின மாணவர்களுக்கென விழிப்புணர்வு முகாம்கள் அவ்வப்போது ஒன்றிய அரசால் நடத்தப்பட்டு வருகிறது என்றும், அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, ஒன்றிய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்று சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் ராம்தாஸ் அத்வாலே அவர்கள், மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

# மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடாமுயற்சி தேவை!

## செஞ்சியில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!

செஞ்சி, ஆக 17–

மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடாமுயற்சி தேவை என செஞ்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி சிறப்புரையாற்றினார்.



நாட்டின்79வது சுதந்திர தின நாள் திருவிழா இன்று நாடு முழுவதும் கோலாலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நாட்டின்79 வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதை முன்னிட்டு செஞ்சி அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சிபேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார் .தொடர்ந்து சுதந்திர தினவிழாவைமுன்னிட்டு சிறப்புரையாற்றி பள்ளி ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

இன்று நாடு முழுவதும் 79 ஆவது சுதந்திர தின விழா சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டு வருகிறது நாடு முழுவதும் சுதந்திர தினத்தில் முதலமைச்சருக்கு தேசிய கொடியினை ஏற்றி வைக்கும் உரிமை பெற்றுக் கொடுத்தவர் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.அவர் வழியில் ஆட்சி செய்யும் தமிழ் நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்கல்வியும், சுகாதாரமும் தனது இரண்டு கண்களாக எண்ணி கல்வித் துறைக்கும் மருத்துவத்திற்கும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் இல்லம் தேடி கல்வி, புதுமைப்பெண் திட்டம்,தமிழ் புதல்வன், நான் முதல்வன்,முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.இன்றைக்கு தனியார் பள்ளிகளை மிஞ்சும் வகையில் அரசு பள்ளி கட்டிடங்களை முதலமைச்சர் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார் அந்த வகையில்இன்று பல்வேறு பள்ளிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

நம்மிடத்தில் இருந்து திருட முடியாத ஒரு சொத்து கல்வி.இந்த கல்வியை மாணவிகள் நல்ல முறையில் படித்து தங்களின் தாய் தந்தைக்கு நல்ல பெயரை பெற்று தர வேண்டும். மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடாமுயற்சிகட்டாயம் தேவை எனமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ உறுதிபட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், துரை, பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள் மாணிக்கம், திலகவதி,மன்ற உறுப்பினர்கள்அஞ்சலை நெடுஞ்செழியன், லட்சுமி வெங்கடேசன், கார்த்திக்,சீனிவாசன்,ஜான் பாஷா, சங்கர், புவனேஸ்வரி அண்ணாதுரை, மகாலட்சுமி கமல நாதன், சிவகுமார்,அகல்யா சுமித்ரா சங்கர்,சங்கீதா சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர்,பள்ளி மேலாண்மை குழு தலைவர்பள்ளி இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.பள்ளி உதவி தலைமை ஆசிரியர் தேவதாஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**செஞ்சி பேரூராட்சிஅலுவலகத்தில் சுதந்திர தின விழா:**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் நாட்டின்79வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதை முன்னிட்டு பேரூராட்சி அலுவலகத்தில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் முன்னிலை வகித்தார்.பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மஸ்தான் கலந்துகொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, மன்ற உறுப்பினர்கள்.சந்திரா அச்சுதன்,அஞ்சலை நெடுஞ்செழியன், லட்சுமி வெங்கடேசன், கார்த்திக், சீனிவாசன்,ஜான்பாஷா, சங்கர், எம். பி.ஆர்.மோகன், புவனேஸ்வரி அண்ணாதுரை, மகாலட்சுமி கமலநாதன், சிவகுமார், அகல்யா வேலு, சுமித்ரா சங்கர், சங்கீதா சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் செந்தில் குமார்,செந்தில் குமரன், முன்னால் கவுன்சிலர்கள், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பேரூராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பஹ்ரைன் நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்!

## கருணாநிதி சண்முகம் தலைமையில் நடைபெற்றது!

மனாமா, ஆக. 17–

கடந்த வெள்ளிக்கிழமை வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் . பஹ்ரைன், அயலக அணியின் துணை அமைப்பாளர் கருணாநிதி சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அவைத் தலைவர் முபாரக் அலி முன்னிலை வகித்தார்.

தமிழ்த் தாய் வாழ்த்து உடன் தொடங்கப்பட்ட நிகழ்ச்சியில். கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து, ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

**மண், இனம், மொழி காக்கும்.**

'ஓரணியில் தமிழ்நாடு' என்ற திட்டத்தை தொழிலாளர் நலத்துறைச் செயலாளர் அப்துல் சலீமும் துணைத் தலைவர் குடந்தை ஆரிப்பும் பஹ்ரைன் நாட்டில் வாழும் தமிழ் மக்களிடம் கொண்டு செல்லும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

முன்னதாக, கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பங்கேற்ற அனைவருக்கும், மருத்துவ சலுகை கொண்ட அடையாள அட்டையை துணை அமைப்பாளர்கள் சதீஷ் குமார், சோழகர் திருமேனி மற்றும் சுல்தான் இப்ராஹிம் ஆகியோர் வழங்கினார்கள்.

திராவிட இயக்கச் சிந்தனையாளர் வல்லம் பசீர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பாரதி தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கவிஞர் அப்துல் கையூம். மனிதநேய மக்கள் கட்சி சார்பில் யூசுப் ராஜகிரி, மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் மன்னை அலி. பஹ்ரைன், அயலக அணியின் நிர்வாகிகளான. துணைத் தலைவர்கள் மணிவண்ணன், குடந்தை ஆரிப். பொதுச் செயலாளர் மேலப்பூந்தை இஸ்மாயில், இணைச் செயலாளர் பிரபாகரன் தனசேகரன். ஆலோசனைக் குழுத் தலைவர் சரபுதீன் உள்பட நிர்வாகிகள் பலரும்

மேலும் நூற்றுக்கணக்கான கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு கலைஞர் அவர்களுக்கு மரியாதை செலுத்தினார்கள். பிரபாகரன் வரவேற்புரையாற்ற, இஸ்மாயில் தொகுத்து வழங்க. மன்னை செல்வம் நன்றி கூறினார்.

# சென்னை உள்ளிட்ட 20 மாவட்டங்களில் மழை!

## வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை,ஆக.17–

சென்னை உள்ளிட்ட 20 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல், தெற்கு ஒடிசா, வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நிலவிய காற்ற முத்த தாழ்வு பகுதி, நேற்று (16–08–2025) காலை 8.30 மணி அளவில், தெற்கு ஒடிசா மற்றும் அதனை ஒட்டிய வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நிலவியது. மேலும் தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக ஆக. 17, 18 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இந்த நிலையில் அடுத்த 3 மணி நேரத்துக்கு (இரவு 7 மணி வரை) தமிழகத்தின் திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவ ட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், திருப்பத்தூர், தேனி, தென்காசி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக் கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் , கன்னியாகுமரி மாவட்டங்கள், கோயம்புத்தூர் மற்றும் திருநெ ல்வேலி மாவட்ட மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.




தி.மு.க. அயலக அணியான பஹ்ரைன் என்.ஆர்.டி.ஐ.ஏ. அமைப்பின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் கருணாநிதி சண்முகம், குடந்தை ஆரிப், மணிவண்ணன், சதீஷ்குமார், சோழகர் திருமேனி, சுல்தான், இப்ராஹிம், மேலப்பூந்தை இஸ்மாயில், பிரபாகரன், தனசேகரன், மன்னை செல்வம், சரபுதீன், ஆரூர் சாகுல், சேகர் ராஜலிங்கம், அக்பர் அலி, இளையராஜா, மிராஜா, அல்லாப் பிச்சை, அசோக் குமார், ஆசாத் மைதீன், ஆழியூர் சாகுல், பிரபாகரன், பக்ருதீன், ஆரூர் வெங்கட், அப்துல் ஜப்பார், ராஜசேகர், சிதம்பரம், ரவிசங்கர், அஸ்ரி துரை, முருகன், சீனிவாசன், முகமது அக்கிம், தக்கலை சாம், விக்கி, மணிமாறன், முகமது சலீம் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.